தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(1994-95)

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்தி ஏழாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 6 MAY 1995)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(1994 - 95)

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்தி ஏழாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.

53-32—A

பொருளடக்கம்

பக்கங்கள்.

குழுவின் அமைப்பு iii

அறிக்கை

(i) முகவுரை v

(ii) குழுவின் கூட்டங்கள் v

(iii) குழுவின் ஆய்வுப் பயணம். v

(iv) பொதுக் குறிப்புரைகள் vi

இணைப்புகள்

1. 1993-94ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப் பெற்றதாகவும் மற்றும் துறையின் பதில்களைப் படித்துப் பதிவு செய்யப் பெற்றதாகவும் முடிவு செய்யப்பெற்ற உறுதி மொழிகளின் துறைவாரியான விவரம் 1–17

2. அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல் 18

3. நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல் 10–92

4. குழுக்கூடிய நாட்கள் பற்றிய விவரம் 21

5. நிறைவேற்றப்பெற்ற / படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகளின் சதவிதம் 22

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994-95ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு.

(13—6—1994 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.)

தலைவர் :

1. திரு. கே. கே. சின்னப்பன்

உறுப்பினர்கள் :

2. திரு. க. அர்ச்சுனன்
3. திரு. ஆ. அறிவழகன்
4. திரு. எஸ். ஆசைமணி
5. திரு. த. க. இராதாகிருஷ்ணன்
6. டாக்டர் இ. இராமகிருஷ்ணன்
*7. திரு. வே. கண்ணன்
8. திரு. சிங்கை கோவிந்தராஜ்
9. திரு. எம். சுந்தரசாமி
10. திரு. ஆ. செல்லதுரை
**11. திரு. இரா. தங்கராசு
12. திரு. நா. சா. பழனிச்சாமி
13. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்

செயலகம் :

திரு. செ. சு. ஜானகிராமன், செயலாளர்.

திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர், கூடுதல் செயலாளர்.

திருமதி பானுமதி ஆனந்தராஜன், துணைச் செயலாளர்.

திரு. நா. துளசிபாய், சார்புச் செயலாளர்.

---

* 11—11—1994 வரை
*11—11—1994 முதல்

அரசு உறுதிமொழிக் குழு

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்தி ஏழாவது அறிக்கை

பெறுநர் :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை.

(i) முகவுரை

1. 1994-95ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்ட மன்றப் பேரவை) இருபத்தி ஏழாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 248(1)ஆம் விதியின் கீழ் 1994-95 ஆம் ஆண்டிற்கான குழு, 1994ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றது.

(ii) குழுவின் கூட்டங்கள்

3. குழு, சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

4. பேரவையில் அமைச்சர்களால் கொடுக்கப்பெற்று, ஏற்கனவே நிலுவையாக உள்ள (முந்தைய அறிக்கை எண். 19 இணைப்பு—3) 433 உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை குழு, மேற்படி கூட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது. நிறைவேற்றப் பெறாத உறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட அதிகாரிகளை விசாரணை செய்து நேரில் விவரங்களை சேகரித்தது. தேவைப்படின், செயலகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு செயலாளர்கள் மற்றும் இதர அதிகாரிகளை சென்னையில் நடைபெற்றக் கூட்டங்களில் விசாரணை செய்து நேரடித் தகவல்களைக் குழு திரட்டியது. இவ்வகையில் குழு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுத் துறைச் செயலாளர்களுடன் அனைத்து உறுதிமொழிகள் குறித்தும் கலந்துரையாடியது. நிறைவேற்றப்பெற்றனவாக அல்லது படித்துப் பதிவு செய்யப் பெற்றனவாகக் குழுவினால் கருதப்பட்ட உறுதி மொழிகள் பற்றிய விவரங்கள் இணைப்பு—1இல் கொடுக்கப்பெற்றுள்ளன.

5. இவ்வறிக்கையில் திண்டுக்கல் அண்ணா, மதுரை, காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்கள் குறித்த உறுதிமொழிகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதர மாவட்டங்கள் குறித்த உறுதிமொழிகள் பற்றிய அறிக்கைகள் பேரவைக்கு தனியே அளிக்கப்படுகின்றன.

(iii) குழுவின் ஆய்வுப் பயணம்.

6. உறுதிமொழி எண். 320/93: பழங்கால இசைக் கருவிகளை இசைக்கும் பயிற்சி அளிப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 15-4-1993இல் பதில் தந்துள்ளார்கள். இந்த இசைக் கருவிகளையெல்லாம் பழனியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்காமல் பல்வேறு இடங்களில் வைத்து பயிற்சி கொடுக்கலாம் என்ற திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. அதற்கான செயற்குறிப்பு எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள்.

7. துறையால் நடத்தப்பட்டு வரும் பயிற்சி பள்ளி இருக்கிறது. அதில் நாதஸ்வரம், தவில், மற்றும் பழங்கால இசைக் கருவிகளை இசைக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. கலைகள் நசிந்து விடாமல் பாதுகாக்கவும் மேலும் வளர்ச்சியடைய செய்யவும் பழநி திருக்கோயில் சார்பில் ஒரு இசைக் கல்லூரி துவங்குவது அவசியமாகிறது என்றும், ஆணையர் வாய்மொழியாக தெரிவித்தார். அதற்கு வேண்டிய ஆசிரியர்கள், கலைஞர்கள் அவர்களுடைய சம்பளம் குறித்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

8. பழங்கால இசைக் கருவிகளை இசைக்கும் பயிற்சி அளிக்கவும், பயிற்சி பெறவும் விருப்பமுள்ள ஆசிரியர் மற்றும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டதில் 18 விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. அதில் 8 மாணவர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு அவர்கள் தனியார் பள்ளிகளில் பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர். அவர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூபாய் 250 வீதம் நிர்ணயிக்கப்பட்டு திருக்கோயில் உபரி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு வெளியூர் அனுப்பும்போது உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்றும் இக்குழு துறைக்குப் பரிந்துரை செய்துள்ளது. (விவரம் பக்கம் 8இல்)

9. உறுதிமொழி எண். 324/94: மலையடிவாரப் பாதை மற்றும் சுற்றுப்புறங்களை அழகுப்படுத்துவது குறித்து.

அ. பழனி திருக்கோயில் மலைக்கோயில் பாதை மற்றும் அதன் சுற்றுப்புறஅங்களை அழகுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திருக்கோயிலுக்கு வரும் அணுகுச் சாலைகளை விரிவு படுத்துதல், ஆக்கிரமிப்புக்களை அகற்றுதல், பேருந்து நிலையத்தினை விரிவு படுத்துதல், தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் தேவைக்கேற்ப அடிப்படை வசதி களை செய்துத்தருதல், நட்சத்திர உணவு விடுதி, அறிவிப்பு தகவல் மையங்கள் அமைத்தல் போன்ற பணிகளை நகராட்சி நிர்வாகம் மூலம் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்குத் தேவையான வரைபடங்கள், விரிவாக்கப் படங்கள் ஆகிய வற்றைக் குறித்த புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு கட்டிட கலைஞர் திரு. ஏ. என். சென்குப்தா அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

10. இதற்காக ரூபாய் 18 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்து ஆணையருக்கு அனுப்ப வேண்டும். அரசு அனுமதி பெற வேண்டும். அரசு அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் என்று பழனி நகராட்சி ஆணையர் குழுவிற்கு விளக்கினார். (விவரம் பக்கம் 8இல்)

(ii) பொதுக் குறிப்புரைகள்

11. பேரவையில் ஒளிக்கப்பெறும் உறுதிமொழிகள் மீது குறிப்பிட்ட கால அள விற்குள் நடவடிக்கைகள் முற்றுப்பெற வேண்டும் என்பதைக் குழு வலியுறுத்துகிறது.

12 குழுவின் இந்த அறிக்கைக்கு 1995ஆம் ஆண்டு மே திங்கள் 5ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

சென்னை-600 009,
5—5—1995,
சித்திரை 22 யுவ,
திருவள்ளுவராண்டு—2026.

கே. கே. சின்னப்பன்,
தலைவர்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-1

1994-95 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாக அல்லது பதில்களைப் படித்துப் பதிவு செய்யப் பெற்றனவாக முடிவு செய்யப் பெற்ற உறுதிமொழிகளின் துறை வாரியான பட்டியல்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

ஊரக வளர்ச்சித் துறை.

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
1	442/90	உடுக்குறியிட்ட வினா எண் 1318, அணை வினா திரு. எஸ். பழனிவேல், எம்.எல்.ஏ., 3—5—1990.	சொந்த கட்டிடம் இல்லாத பேரூராட்சிகளுக்கு முழுவது மாக கட்டிடம் கட்டி முடிப்பதற்கு நிட்டம் உள்ளதா என்பது குறித்து.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

நிண்டுக்கல்—அண்ணா மாவட்டத்திலுள்ள 24 பேரூராட்சிகளும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டு வருகின்றன. மேலும் 16 பேரூராட்சிகளில் 1993-94 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் பராமரிப்பு வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளது சொந்த கட்டிடங்கள் இல்லாத பேரூராட்சிகள் ஏதும் இம்மாவட்டத்தில் இல்லை.

கல்வித் துறை.

(1)	(2)	(3)	(4)
2	382/89	உடுக்குறியிடாத வினா எண் 1367 திரு. எஸ். ஏ. தங்கராசன், எம்.எல்.ஏ., 2—11—1989.	நிண்டுக்கல் மலைக்கோட்டை மைதானத்தில் விளையாட்டு அரங்கம் கட்டுவது குறித்து.

(5)

கோட்டை மாரியம்மன் கோவில் பின்புறமுள்ள காலியிடத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஆசாணை எண் 952, நாள் 24—5—1983-ல் மதுரை மேற்கு மாவட்டமாக இருந்தபோது வழங்கப்பட்டது. மைதானத்திகு பின்புறம் ஐயப்பன் கோவில் இருந்ததால், ஐயப்பன் கோவில் நிர்வாகிகள் மிரர் மைதானத்திற்கு நடுவே பாதைகேட்டு மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர்நிதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். வழக்கு உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த பகுதியில் உள்விளையாட்டரங்கம் கட்டவேண்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேலி அமைப் பதற்கு ரூ. 1.20 இலட்சம் பொதுப்பணித் துறையினரிடம் வழங்கப்பட்டு பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மதுரை, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் முகப்பு வரைபடம் 22—9—1994-ல் பெறப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் அவர்கள் திண்டுக்கல் வருகை புரிந்தபோது ரூ. 70 லட்சம் மதிப்பில் உள்விளையாட்டரங்கம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

3	166/93	மானியக் கோரிக்கை எண் 17, மானியக் கோரிக்கையின்மீது விவாதத்திற்கு அமைச்சரின் பதிலுரை 1—4—1993 ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ.,	நிலக்கோட்டைக்கு அரசு பெண்கள் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

நிதிப்பற்றாக் குறையின் காரணமாகபுதிய கல்லூரி தொடங்க இயலாது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை.

(1)	(2)	(3)	(4)
4	301/92	கூட்டுறவு மற்றும் நுகர்வு பொருள்கள் வழங்குதல் பற்றிய மாலையக்கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், எம். எல். ஏ., அவர்களின் விளக்கம்.	நிலவள வங்கியை நிலக்கோட்டைக்கு என்று தனியாக அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப் படுமா என்பது குறித்து.

(5)

நிலவள வங்கியை நிலக்கோட்டைக்கென்று தனியாக அமைப்பது குறித்து பதிவாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டதில் புதிதாக நிலவள வங்கி ஆரம்பிப்பதைவிட அதன் இணையினை ஆரம்பிப்பது நலம் என்றும், புதிய நிலவள வங்கி ஆரம்பித்தால் புதிய நிலவள வங்கியும் தற்போதுள்ள வங்கியும் செயல்பட வாய்ப்பில்லாமல் போகும் எனவே கொடைக்கானல் கூட்டுறவு நிலவள வங்கியின் கிளை, நிலக்கோட்டையில் 22—1—1993-ல் ஆரம்பிக்கப்பட்ட நல்ல முறையில் செயல்படுவதால் புதிய நிலவளவங்கி ஆரம்பிக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறை.

(1)	(2)	(3)	(4)
5	469/92	உடுக்குறியிடாத வினா. 3504 திரு. எஸ். எம். துரை, எம். எல். ஏ., 25—9—1992.	நபார்ட் நிதியுதவியுடன் அடுத்த 10 ஆண்டுகளில் 75,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுதல் நடப்பு ஆண்டில் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருத்தல் ஆகியவற்றில் கைத்தறித் தொழிலையே முழுமையாக நம்பியிருக்கும் சின்னாளப்பட்டிக்கு முன்னுரிமைகொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

கைத்தறி தொழிலையே நம்பியிருக்கும் சின்னாளப்பட்டிட்கு முன்னுரிமை கொடுப்பது குறித்து நாங்கள் முயற்சி செய்தோம். சின்னாளப்பட்டியில் உயர்ந்த ரக சேலை செய்வதால் யாருமே விசைத் தறிக்கு மாற்றக்கொள்ள முல்வரவில்லை. அவர்கள் விலை அதிகமுள்ள சேலைகளை விற்பனை செய்கிறார்கள். அவர்கள் 25 பேர் சேர்ந்து வந்தால் இதை நிறை வேற்றலாம்.

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை.

(1)	(2)	(3)	(4)
6	313/93	கவன ஈரப்பு திரு. வே. பெரியசாமி, எம்.எல். ஏ., 15—4—1993.	திண்டுக்கல் அண்ணா மாவட்டம் வேடசந்தூர் தாலுக்கா மீதுக்கம்பட்டியில் உள்ள குட்வில் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் அரசு ஆணையை அமுல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

குட்வில் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் அரசு ஆணையை அமுல்படுத்தப்பட்டது. அரசு ஆணைகளின்படி இவ்வாலைத் தொழிலாளர்களில் தகுதியுள்ளோருக்கு இடைக்கால நிவாரணம் தலா நாளொன்றுக்கு ரூ. 3 வீதம் ஒட்டுமொத்த தொகை தலா ரூ. 450 வீதம் வழங்கப்பட்டது. இவ்வாலையில் உள்ள மொத்தத் தொழிலாளர்கள் 91 பேரில் அரசணைப்படி தகுதியுள்ள 44 தொழிலாளர்களில் 40 பேருக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டது. 4 தொழிலாளர்கள் பணியிலிருந்து நின்று விட்டனர்.

(1)	(2)	(3)	(4)
7	218/94	உடுக்குறியிட்ட வினா எண் 13849 துணை வினா திரு. ஆ. சுப்புரத்தினம், எம்.எம்.ஏ., 21—4—1994.	பழனி நகரில் தொழிற்பயிற்சிக் கல்லூரி தனியார் முன் வந்தால் இதை அமைக்க அரசு அனுமதி வழங்குமா என்பது குறித்து.

(5)

பழனி நகரில் தொழிற் பயிற்சி கல்லூரி அமைக்க தனியார் யாரும் இதுவரையில் முன்வரவில்லை தனியார்கள் முன்வந்தால் அனுமதி அளிக்கலாம். மத்திய அரசும் இதில் உதவும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை.

(1)	(2)	(3)	())
8	21/93	உடுக்குறியிடாத வினா 5324 திருமதி ஏ. எஸ். பொன்னம் மாள், எம்.எல்.ஏ., 8—2—1993.	நிலக்கோட்டை தொகுதி கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ஒணான் ஊத்திலிருந்து பைப்லைன் போட்டு நீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா? எப்போது என்பது குறித்து.

(5)

ஒணான் ஊத்தில் போதிய நீராதாரம் இல்லை என்பது கண்டறியப்பட்டதால் ஆல்டர்நேட் கோர்ஸ் கண்டு பிடிக்கப்பட்டு நிலக்கோட்டையிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

(1)	(2)	(3)	(4)
9	94/93	உடுக்குறியிடாத வினா ஏண் 5327 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ. 17—3—1993.	நிலக்கோட்டை பேரணையிலிருந்து வத்தலக்குண்டு டவுன் பஞ்சாயத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பது குறித்து.

(5)

திண்டுக்கல்—அண்ணா மாவட்டம் வத்தலகுண்டு பேருராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கு ரு. 220.82 இலட்சங்களுக்கு வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 6—1—1993-ல் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அரசிடமிருந்து ஆட்சி முறை ஒப்பளிப்பு ஆணை கிடைத்த பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(1)	(2)	(3)	(4)
10	266/93	உடுக்குறியிடாத வினா எண் 8945 திரு. எம். ஆண்டி அம்பலம், எம். எல். ஏ., 13—4—1993.	மாவட்ட தலைநகரான திண்டுக்கல்லில் எந்தெந்த பகுதிகளில் குடிநீர் வசதி விரைவில் செய்து முடிக்கப்படும் என மாவட்ட நிர்வாகம் செய்திதாளில் எப்போது அறிக்கை வெளியிட்டது அப்பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

திண்டுக்கல் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திண்டுக்கல்லில் விடுப்பட்ட பகுதிகளுக்கு பகிர்மானக்குழாய்பதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை ஒன்பது பிரிவுகளாகப் பிரித்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 11-11-94 அன்று வேலை உத்தரவு கொடுக்கப்பட்டு தற்சமயம் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும் 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

(1)	(2)	(3)	(4)
11	424-93	உடுக்குறியிடாத வினா எண் 5697 திரு. எம். ஆண்டி அம்பலம் எம்.எல்.ஏ., 22—4—1993.	நத்தம் யூனியன், பின்னப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட வேலாயுதம் பட்டியில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கும் நிலையில் போதுமான குடிநீர் வசதி இல்லாதிருப்பதால் பைப்லைன் மூலம் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

வேலாயுதம் பட்டியில் குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதியாண்டில் (1995-96) வரவு-செலவு திட்டத்தில் சேர்க்க முன் மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஒப்புதல் பெறப்பட்டது திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

தற்போது ஒரு தரைமட்டத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது இத்தொட்டிக்கு திறந்த வெளி கிணற்றிலிருந்து நீர் விசைப்பம்பு மூலம் ஏற்றப்பட்டு தொட்டிகள் சுற்றி பொருத்தப்பட்ட நல்லிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப் படுகிறது. இது தவிர, இரண்டு ஆழ் துளைக் கிணறுகள் 2, கைம்பம்பு பொருத்தப்பட்டும் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.

பொதுப்பணித் துறை.

(1)	(2)	(3)	(4)
12	431/85	உடுக்குறியிட்ட வினா எண். 1344. துணை வினா திரு. வி. பி. பாலசுப்பிரமணியன், எம்.எல்.ஏ., 17-7-1985.	ராமகிரி நீர்த்தேக்கம் உடைந்திருக்கிறது. ஒரு சிறிய உடைப்பு ஏற்பட்டு இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சுரவலரையை நிர்ணயித்து அதற்குள் பணியை முடிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பது குறித்து.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் வேடசந்தூர் ராமகிரி கிராமத்தில் உடைந்த கண்மாய் புதுப்பிக்கும் பணிக்கான மதிப்பீடு ரூபாய் 94.20 இலட்சம் என மதிப்பிடப்பட்டு பகுதி 2 (1995—96) திட்டத்தில் சேர்ப்பதற்கு மாநிலத்-திட்டக்குழு இசைவளித்துள்ளது. நிதி நிலைக்குழுவின் ஒப்புதலும் பெற்று இத்திட்டம் 1995—96-ம் ஆண்டு நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும்.

(1)	(2)	(3)	(4)
13	78/92	உடுக்குறியிட்ட வினா எண். 2049, துணை வினா செல்வி பி. நிர்மலா, 11-3-1992.	திண்டுக்கல் பழனி சாலையில், மாங்கரைப் பாலம் குறுகியதாக உள்ளதால், பழனிக்கு பாதயாத்திரை யாகச் செல்லும் பல பக்தர்கள் ஆக்ஸ்டெண்டில் சாவதாலும் பாலத்தை விரிவுபடுத்தும் பணி விரைவில் நடைபெறுமா என்பது குறித்து.

மாங்கரை ஆற்றின் மீதுள்ள குறுகிய மற்றும் வலுவிழந்த பாலத்தை அகற்றிவிட்டு அதற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் பணிக்கு அரசாணை (நிலை)-- எண். 729, பொதுப்பணி (நா.1) துறை, நாள் 14-5-1993 மூலம் ரூபாய் 40 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, பாதை கைப்பாடுகள் சோதனை நடத்தப்பட்டு, போரிங் வேலை ஆரம்பிக்கப்பட்டு பைல் அடிக்க பைலிங் இயந்திரமும் கொண்டுவர ஒப்பந்தக்காரர் ஏற்பாடு செய்துள்ளார்.

(1)	(2)	(3)	(4)
14	162/92	உடுக்குறியிட்ட வினா எண். 2051, செல்வி மீ. நிர்மலா, எம்.எல்.ஏ., 24-3-1992.	திண்டுக்கல் நத்தம் செல்லும் சாலையில் புகைவண்டி நிலையத்தில் அருகில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பது குறித்து.

திண்டுக்கல் நத்தம் செல்லும் சாலையில் புகைவண்டி நிலையத்தின் அருகில் மேம்பாலம் கட்டும் பணிக்கு 24—2—1993ல் ரூ. 320 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ரூ. 352 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது ரூ. 150 இலட்சம் இந்த வருடம் அலாட்மெண்ட் பண்ணி இருக்கிறார்கள். நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

15	309/93	உடுக்குறியிடாத வினா எண். 5461, திரு. எம். ஆண்டி அம்பலம், எம்.எல்.ஏ., 15-4-1993.	திண்டுக்கல் - நத்தம் வட்டாணம் சாலையில் குமாரர் பாளையம், திந்தாமபட்டி வழியாக சிறுவத்தூர் சாலையுடன் இணைக்கும் வகையில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

திண்டுக்கல் - நத்தம் வட்டாணம் சாலையை சிறுவத்தூர் சாலையுடன் இணைக்கும் பணிக்கு 36·08 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு ஏற்கனவே வேலை நடைபெற்றுவருகிறது. அனைத்து வேலைகளும் மார்ச் 1995-க்குள்முடிவுறும்.

16	87/94	உடுக்குறியிட்ட வினா எண் 9761 துணை வினா திரு.மு. ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ., 18-3-1994.	நிலக்கோட்டைத் தொகுதி பேரையில் கட்டப்பட்ட பாலம் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

பேரணை ரெகுலேட்டர் 1988-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது ஒரு நீர்ப்பாசன ரெகுலேட்டர் ஆகும். இதன்-- மேலுள்ள சாலை மிகவும் குறுகியதும், ஆய்வுக்குச் செல்லும் இலகு வாகனங்கள் மட்டுமே செல்வதை தாங்கக் கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டதாகும். கனரக வாகனங்கள் இதன்மேல் செல்ல முடியாது. இது பொது போக்கு வரத்து சாலையும் இல்லை. தற்போது இது பழுதடைந்த நிலையில் இல்லை. வலுவுள்ளதாகவே உளளது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை.

(1)	(2)	(3)	(4)
17	120/87	உடுக்குறியிட்ட வினா எண். 11796, துணை வினா திரு. மெ. ஆண்டி அம்பலம், எம்.எல்.ஏ., 25-3-1987.	நத்தம் தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை உடனடியாக மாற்றி அங்கு அரசு மருத்துவமனை அமைத்து தருவது குறித்து.

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள நத்தம் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு ஆணை நிலை எண். 1550, நாள் 11—12—1991-ன்படி தற்போது அரசு தாலுக்கா மருத்துவமனையாக மாற்றப்பட்டு இயங்கிவருகிறது.

(1)	(2)	(3)	(4)
18	167!93	உடுக்குறியிட்ட வினா 9030, திரு. ஆ. சுப்புரத்தினம், எம்.எல்.ஏ., 2-4-1993.	பழனி வட்டம் பழைய ஆயக்குடி அரசு மருத்துவ மனைக்கு ஆய்வுக்கூட வசதி விரைவில் ஏற்படுத்தித் தரப்படுமா என்பது குறித்து.

(5)

நிதிப் பற்றாக்குறை காரணத்தால் தான் ஆயக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆய்வுக்கூட வசதி செய்ய முடியவில்லை

(1)	(2)	(3)	(4)
19	283!93	உடுக்குறியிட்ட வினா 9054, துணை வினா திரு. எம். பெரியவீரன், எம்.எல்.ஏ., 15-4-1993.	பெரியகுளம் தொகுதி பண்ணைக்காடு அரசு மருத்துவ மனைக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் மருத்து வர்களை ஒப்பந்தத்தின் அடிப்படையில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

பண்ணைக்காடு அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் டாக்டர் பணியமர்த்தப்பட்டுள்ளார். ஒப்பந்த அடிப்படையில 56 இடங்களில், மிகவும் மோசமான ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 1, 2 மாதங்களில் பணியமர்த்தப்படுவார்கள்.

(1)	(2)	(3)	(4)
20	377!93	உடுக்குறியிடாத வினா எண் 7989, திரு. எம். ஆண்டி அம்பலம், எம்.எல்.ஏ., 19-4-1993.	திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் போதுமான அளவு தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை-எடுக்க முன்வருமா என்பது குறித்து.

(5)

அண்மையில் டி.எம்.எஸ். திண்டுக்கல் சென்று அதனை ஆய்வு செய்தபோது நகராட்சி குடிதண்ணீர் வழங்குதல் சிறிது காலம் நிறுத்தப்பட்டிருந்தது என்றும் மறுபடியும் பழையபடியே தற்போது முழுமையாக வழங்கப்பட்டு வருகிறது என்றும் தெரிய வந்தது. தற்போது தண்ணீர் தட்டுப்பாடு இல்லை.

(1)	(2)	(3)	(4)
21	634!93	(வினா எண் 4585 (உடுக்குறியிடாதது திரு. எம். ஆண்டி அம்பலம், எம்.எல்.ஏ., 26-10-1993.	நத்தம் தொகுதி வத்திசப்பட்டியில் மிக வசதியில்லாத ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதற்காக கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

(5)

வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட சர்வே எண் 491-ம் மொத்தம் 5 ஏக்கர் புறம்போக்கு நிலம் உள்ளது. இந்நிலத்தினை மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அவர்களிடம் இருந்து அனுமதி பெற்று கையகப் படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் நிதி நிலைமைக்கேற்ப அரசு ஆவன செய்யும்.

மேலும் வத்திப்பட்டியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம் தற்காலிகமாக ஒரு வாடகை இல்லாக் கட்டிடத்தில் - செயல்பட்டு வருகிறது. இதற்கு போதிய மின்வசதி உள்ளது.

(1)	(2)	(3)	(4)
22	114/94	உடுக்குறியிட்ட வினா எண் 21256, துணை வினா திரு. எஸ். எம். துரை, எம்.எல்.ஏ., 28-3-1994.	திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பணிநேரத்தில் இல்லாமல் இருந்ததற்காக மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து.

(5)

திண்டுக்கல் மருத்துவமனையில் பணிநேரத்தில் இல்லாமல் இருந்ததற்காக மருத்துவர்கள் 2 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(1)	(2)	(3)	(54)
23	228/94	உடுக்குறியிட்ட வினா எண். 10514, திரு. எம். ஆண்டி அம்பலம், எம்.எல்.ஏ., 25-4-1994.	நத்தம் நகரில் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது தாலுக்கா மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டதால் கட்டிட வசதிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

(5)

நத்தம் நகரில் இயங்கி வந்த சுகாதார நிலையம் தற்போது வட்ட நலமையமாக மருத்துவ மனையாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளதால், தற்போது அரசு ஆணை எண். 1172-டி, நாள் 17-11-1993-ன் படி இம்மருத்துவமனைக்கு நுண்கதிர் பிரிவு ஆய்வுக்கூடம், பிணவறை போன்ற கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அரசாணை எண். 3-டி, எண். 421, சுகாதாரம், நாள் 2-5-1994-ன் படி 6 படுக்கை வசதிகள் இருந்தது, 32 படுக்கை வசதிகளாக மாற்றிக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வருவாய்த் துறை.

(1)	(2)	(3)	(4)
24	24/90	உடுக்குறியிட்ட வினா எண். 1527, திரு. ப. காளியப்பன், எம்.எல்.ஏ., 20-1-1990.	திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் ஒட்டல் சத்திரத்தை வட்டமாக்கும் ((தாலுகா) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.

(5)

இவ்றுதிமொழி படித்துப் பதிவு நிசய்யப்பெற்றதாகக் கருதப்பட்டது.

வணிகவரி மற்றும் அறநிலையத்துறை.

(1)	(2)	(3)	(4)
25	320/93	மானியக் கோரிக்கை எண். 12, இந்து சமய அறக்கட்டளைகள் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் பதிலுரை 15-4-1993.	பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் பழம்கால இசைக் கருவிகளை இசைக்கும் பயிற்சியை அளிக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

பழங்கால இசைக் கருவிகளை இயக்கும் பயிற்சி பெற 18 மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.. விதில் 8 மாணவர்கள் மட்டுமே இத்துறையின் ஆளுகையின் கீழ் அமைந்துள்ள இதர இசைப் பயிற்சி நடைபொறும் பள்ளிகளில் சென்று பயிற்சி பெற அனுப்பப்பட்டுள்ளனர். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 250 வீதம் உதவித் தொகை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(1)	(2)	(3)	(4)
26	324/93	மானியக் கோரிக்கை எண். 12 இந்து சமய அறக்கட்டளைகள் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரின் பதிலுரை 15-4-1993.	பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் உள்ள மலை அடிவாரம் பாதை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை அழகுபடுத்த ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை வகுத்து செயல்படுத்த தரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

இந்துசமய விறநிலையத்துறையின் மூலம் அமைக்கப்பட்ட கட்டிடக்கலை நிபுணர் திரு. ஏ. என். செங்குப்தா அவர்களின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. கட்டிடக்கலை நிபுணரால் விளிக்கப்பட்டுள்ள தோராய மதிப்பீடு அறங்காவலர் குழுவின் பரிசிலிக்கப்பட்டு, கோவிலின் இணை ஆணையரிடமிருந்து பெறப்பட்டு, முதலமைச்சரின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். நிதி பற்றிய பிரச்சினை இல்லை.

மதுரை மாவட்டம்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

(1)	(2)	(3)	(4)
27	703-95	உடுகுறியிட்ட வினா எண். 9049, திரு. எம். பெரிய வீரன் எம்.எல்.ஏ., 28-10-1993.	பெரியகுளம் நகரத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுத்தர அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

பெரிய குளம் நகரத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவர் இல்லத்திற்கு புதிய கட்டிடம் கட்டித்தர போதிய நிதி வசதி இல்லை. வருகின்ற ஆண்டில் நிதி நிலைமைக் கேற்ப கட்டிடம் கட்டித் தரப்படும்.

(1)	(2)	(3)	(4)
28	494-86	உடுக்குறியிட்ட வினா எண். 5651, துணை வினா திருமதி பா. வளர்மதி எம்.எல்.ஏ., போடிநாய்க்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர் மன்றம் அமைப்பது பற்றி.	14-5-1986.

(5)

ஒவ்வொரு வட்டத்திற்கும் (தாலுக்கா) ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

எனவே மேற்காணும் அரசின் கொள்கைக்கிணங்க உலும்பட்டியில் தற்போதுள்ள மூன்று குற்றவியல் நடுவர் நீதி மன்றங்களில் இரண்டினை முறையே அண்டிப்பட்டி மற்றும் போடி நாயக்கனூர் ஆகிய இடங்களுக்கு மாற்றலாமா என்றும் அதன் மீது குறிப்பினை அனுப்பிவைக்குமாறும் சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். உயர்நீதிமன்ற பதிவாளரின் பதில் இன்னும் பெறப்படவில்லை. அவருடைய பதில் பெறப்பட்டதும் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(1)	(2)	(3)	(4)
29	395-93	மாண்புமிகு அமைச்சர் குடியுரிமை பாதுகாப்பு மற்றும் தீண்டாமை அவர்களின் பதிலுரை 20-4-1993.	ஒழிப்புச் சட்டத்தை செயல்படுத்த கும்பகோணம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய 4 ஊர்களிலும் ஒரு தனி மாஜிஸ்டிரேட் கோர்ட்டாக இயங்கி வருகிறது. புரொடக்ஷன் ஆப் சில்ட் லிபர்ட்டீஸ் ஆக்ட் மற்றும் பிரிவென்ஷன் ஆப் அட்டராசிட்டீஸ் ஆக்ட் பார் ஸ்பெஷ்யல்ட் கார்ஸ்ட் ஆகிய இரண்டும் செஷன்ஸ் கோர்ட்டிற்கு போயிருக்கிறது. இப்போது 4 ஊர்களிலும் டி.ஜே.எம்.கோர்ட் இருக்கிறது. அங்கே இதை விசாரிக்கலாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் டியூமன் ரைட்ஸ் கோர்ட் உருவாக்க ஹைகோர்ட்டிலிருந்து புரபோசல் வந்திருக்கிறது அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அவைகள் வந்தால் அந்த கோர்ட்டுகளிலேயும் இவைகளை விசாரிக்க முடியும்.

(5)

30	127-94	உடுக்குறியிட்ட வினா எண். 21938 துணை வினா திருமதி பாண்டியம்மாள் எம். எல். ஏ., மதுரையில் பேமிலி கோர்ட் தொடங்கப்படுமா என்பது குறித்து.	4-4-1994.

(5)

குடும்ப நல நீதி மன்றம் மதுரையில் ஆகஸ்ட் முதல் உருவாக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஊரக வளர்ச்சித் துறை.

(1)	(2)	(3)	(4)
31	102-94	உடுக்குறியிட்ட வினா எண். 17172 துணை வினா திரு. எஸ். ஆண்டித்தேவர் எம். எல். ஏ., மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் உ. குன்னத்தூர் (கிராமத்தில் பேருந்து நிற்கும்டத்தில் உள்ள ஊராணியைச் சுற்றிக் கடைகள் மற்றும்	22-3-1994.

குடிசைகள் உள்ளதால் அதன் கழிவு நீர் ஊரணியில் கலந்து கேடு விளைவிப்பதால் அதை அப்புறப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

டி. குன்னத்தூர் கிராமத்தில் பேருந்து நிற்குமிடத்தில் ஊரணியை சுற்றியுள்ள கடைகள், குடிசைகள் போன்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 3 மாதம் ஆகிறது.

பிற்பட்டோர் நலன் மற்றும் மிக பிற்பட்டோர் நலத்துறை

(1)	(2)	(3)	(4)
32	7-94	உடுகுறியிட்ட வினா எண். 17151 துணை வினா திரு. வெ. பன்னீர்செல்வம், எம். எல். ஏ., 3-1-1994.	உத்தமப்பாளையம் தாலுக்கா எல்லையம்மாள் புரத்தில் இயங்கி வரும் கள்ளர் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5

உத்தமபாளையம் தாலுக்கா கள்ளர் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் பணி மார்ச் 1995-க்குள் முடித்து விடுவோம்

பொதுப் பணித்துறை.

(1)	(2)	(3)	(4)
33	289-86	உடுக்குறியிட்ட வினா எண். 7842 திரு. என். எல். வி. சித்தன், எம். எல். ஏ., மற்றும் திரு. மு. மாரிமுத்து எம். எல். ஏ., 16-4-1986.	மதுரை மாவட்டத்தில் நிலையூர் கால்வாய் மேம் பாட்டுத் திட்டத்திற்கான பணி எந்த நிலையில் உள்ளது என்பது குறித்து.

(5)

நிலையூர் கால்வாய் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தலைமைப் பொறியாளர் (பெரியாறு-வைகைத்திட்டம்) அவர்களால் நீர்வள ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் ரூ 4.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி அளிக்க முடிவு செய்தவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

(1)	(2)	(3)	(4)
34	210-89	உடுக்குறியிட்ட வினா எண். 37/2 திரு. நா. ராமகிருஷ்ணன், எம்.எல். ஏ., 29-4-1989.	பெரியார் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்கிறவிவரம்குறித்து.

பெரியாறு அணையைப் பலப்படுத்தப்பட்ட பின்பும் 136 அடிக்கு மேல் நீரைத் தேக்கி வைக்க கேரள அரசு அனுமதி மறுத்து வருகிறது.

இந்த பொருள் குறித்து பரம்பிக்குளம் ஆளியாறு ஒப்பந்த மறு ஆய்வு கூட்டங்களிலும் பேசப்பட்டது. சென்னையில் 5-11-1992 அன்று நடந்த அமைச்சர்கள் மட்ட கூட்டத்தில் கேரள அமைச்சர் பேசுகையில் முன்பு பெரியார் அணையின் பாதுகாப்பு தன்மை பற்றிய எண்ணம் கேரள அரசின் கருத்தாக இருந்தது எனவும், அணை தற்போது பலப்படுத்தப்பட்டுவிட்டதால் இப்பிரச்சினை குறித்து விரிவாக கேரள அரசின் தொழில் நுட்ப வல்லுனர்களுடன் கலந்து தமிழ்நாடு அரசின் எண்ணத்திற்கு இசைவாக பரிசீலிப்பதாகக் கூறினார்.

மேற்கண்ட பொருள் குறித்து மத்திய நீர்வளக்குழுமத்திடமும், கேரள அரசு அதிகாரிகளிடமும், பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை.

(1)	(2)	(3)	(4)
35	607/93	உடுக்குறியிடாத வினா எண். 10355 திரு. எம். ஆண்டி அம்பலம், எம். எல். ஏ., 26-10-1993.	மதுரை தெற்கு தாலுக்கா வலையங்குளத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிதாக கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

(5)

மதுரை— வலையங்குளத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட போதுமான இடம் இல்லை.

36	200/94	உடுக்குறியிட்ட வினா எண் 19347 துணை வினா திருமதி இரா. பாண்டியம்மாள் எம். எல். ஏ., 13-4-1994.	மதுரை மாவட்டம் சேடப்பட்டி தொகுதி, சேடப்பட்டியில் மகப்பேறு பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

புதியதாக ஆதார நல நிலையக் கட்டிடக் கட்டுமானம் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது. பொதுப்பிரிவு மற்றும் மருத்துவ அலுவலர் ஒருவருக்கான குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்போது பிரிவில் 6 படுக்கைகள் மட்டுமே உள்ளது. இப்போது இருக்கும் மருத்துவமனையிலே மகப்பேறு பிரிவு சேர்க்கப்படுகிறது.

(1)	(2)	(3)	(4)
37	219/94	பேரவை விதி 55-ன் கீழ் கவனஈர்ப்புத் தீர்மானம் திரு. டி. கே. ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., 21-4-1994	மதுரை மாவட்டம் திருமங்கலம், தாலுக்கா மருத்துவமனையில் ஜெனரேட்டரை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

இரண்டு ஜெனரேட்டர்கள் மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் இயங்கி வருகின்றன.

38 483/90 உடுக்குறியிட்ட வினா எண் 2209ஏ துணை வினா திரு. எஸ். ஆர். இராதா எம். எல். ஏ., 12-5-1990. மதுரை மாநகரம் மாஸ்டர் பிளானில் மேலூர் செல்கிற வழியில் விவசாயப் பகுதிகளாகவும் அருப்புக்கோட்டை பகுதி தொழில் பகுதியாகவும், கல்விப் பகுதியாக அனப்பநாடி போன்ற பகுதிகளாகவும் அந்த மாஸ்டர் பிளானில் சேர்ப்பது குறித்து.

(5)

அரசின் இறுதி ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள மதுரை உள்ளூர் திட்டப் பகுதிக்கான முழுமைத் திட்டத்தில் மதுரையில் இருந்து மேலூர் நெடுஞ்சாலையை ஒட்டிய கிராமங்களில் விவசாயம் அல்லாத உபயோகங்கள் வளர்ச்சி அடைய வாய்ப்புள்ள இடங்களைத் தவிர முக்கியமாக நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதிகள் தவிர, பிற பகுதிகள் விவசாய நிலமாகவே நிலை நிறுத்தப்பட்டுள்ளது. மதுரை அருப்புக்கோட்டை நெடுஞ்சாலையை ஒட்டி உள்ள நல்லூர், காஞ்சிரன்குளம், சொளவன் குருணை ஆகிய கிராமங்களில் தொழிற் பகுதிக்காக நில உபயோகம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதுரை-நெடுங்குளம் சாலையை ஒட்டி அனுப்பானடி கிராமத்தில் கல்விப் பகுதியாக நில உபயோகம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விவரங்கள் 23-11-1993-ஆம் நாளன்று மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டசபை உறுதிமொழிக் கூட்டத்தில் மதுரை முழுமைத் திட்ட உத்தேச நில உபயோக வரைபடங்களைக் காண்பித்து மதுரை மண்டல துணை நகர் ஊரமைப்பு இயக்குநரால் விளக்கப்பட்டது. அரசின் நிலை ஆணை எண். 122, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 6-2-1995 ல் மதுரை உள்ளூர் திட்ட குழுமத்திற்கான முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பகும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை.

(1) (2) (3) (4)

39 208/94 உடுக்குறியிட்ட வினா எண். 35206, துணை வினா திரு. காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் அவ ஓ. எஸ். அமர்நாத், எம்.எல்.ஏ., 18—4—1994. ருடைய சிலை அமைப்பது குறித்து.

(5)

காரைக்குடியில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் அவருடைய மார்பளவு வெண்கலச்சிலை ரூ. 23,500 செலவில் அமைக்கப் பட்டுள்ளது. சிலை மாண்புமிகு அமைச்சர் (செய்தி மற்றும் விளம்பரத்துறை) அவர்களால் 24—7—1994இல் திறந்து வைக்கப்பட்டது.

கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த்துறை.

(1) (2) (3) (4)

40 270/94 உடுக்குறியிட்ட வினா எண். 10940, துணை வினா டாக்டர் எஸ். சுந்தரராஜ், எம். எல். ஏ., 4-5-94 பகும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மாவா மதுரையில் நெசவாளர்கள் பயிற்சி மையம் (யூனிட்) ஒன்றை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா) என்பது குறித்து.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மானாமதுரையில் நெசவாளர் பயிற்சி மையம் ஒன்று ஆரம்பிக்க இயலாது. அதற்குப் பதிலாக, 1994-95ஆம் ஆண்டில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த பரமக்குடியில் உள்ள சுந்தரராஜப் பெருமாள் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கத்தில் கைத்தறி வளர்ச்சி மையம் மற்றும் தரமான சாயச் சாலை நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தொழில் துறை

(1)	(2)	(3)	(4)
41	61-94	உடுக்குறியிடாத வினா எண். 3883, திரு. மா. சுந்தரதாஸ், எம்.எல்.ஏ., 17—8—1994.	Whether Granite project is being set up in Tamil Nadu and details There of

(5)

தமிழ்நாடு கனிம நிறுவனம் கிராபைட் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதற்கான கரங்கப்பணி துவங்கப்பட்டு கிராபைட் படிவங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. இத்துடன் கிராபைட் மேம்படுத்தப்படும் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகின்றது. இத்தொழிற்சாலை துவங்குவதற்கான சோதனை ஓட்டம் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது எதிர்பாராதவிதமாக தொழிற்சாலையின் ஒரு பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதனால், சில இயந்திரங்கள், மின்சாதனங்கள் மற்றும் சில தொழிற்சாதனங்கள் பழுது அடைந்தது. இவற்றினை திருவாளர்கள் லார்சன் அண்டு டுப்ரோ நிறுவனம் சரிசெய்து வருகிறார்கள். மேலும், இப்பணி இரண்டு மாதங்களில் முடிக்கப்பட்டு கிராபைட் மேம்படுத்தப்படும் தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்க இருக்கிறது.

(1)	(2)	(3)	(4)
42	89-94	உடுக்குறியிட்ட வினா எண். 1068, துணை வினா எண். திரு. கே. ஆர். முருகானந்தம், எம்.எல்.ஏ.	சிவகெங்கையில் ரோமாபுரிப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட கிராபைட் தொழிற்சாலையை விரைவில் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

சிவகெங்கை கிராபைட் திட்டத்திற்கு நிலம் ஒப்படைப்பு செய்தமைக்காக வேலைக்கோரி பெறப்பட்டுள்ள மனுதாரர்களின் மனுக்கள் 457, மேற்படி மனுக்களை முறையாக ஆய்வு செய்து ஆய்வு செய்யப்பட்ட மனுதாரர்கள் முறையாக வாரிதாரர் என்று சான்று வட்டாட்சியாளரிடமிருந்து பெறப்பட்டு தகுதியின் அடிப்படையில் இதுவரை 89 மனுதாரர்களுக்கு தற்காலிக பணியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பணி நியமனம் தொடர்பாக பெறப்பட்டுள்ள ஏனைய மனுக்களின் முழு விவரம் கோரி கோட்ட மேலாளர், சிவகங்காவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. விவரம் பெற்றபின் முறையான வாரிசுதாரர்களுக்கு தகுதியின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை

(1)	(2)	(3)	(4)
43	18-94.	உடுக்குறியிட்ட வினா எண். 11064, துணை வினா திரு. கே. ஆர். முருகானந்தம், எம்.எல்.ஏ., 4—1—1994.	சிவகெங்கை நகராட்சியை முதல் நிலை நகராட்சியாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.

(5)

நகராட்சிகளை பிரிக்கும் போது மக்கள் தொகை அடிப்படையிலும், வருவாய் அடிப்படையிலும் பிரிக்கப்படுகிறது. வருமான வரம்பைக் குறைக்க அரசு முடிவு செய்ய வேண்டும். பிறகுதான் சிவகெங்கை நகராட்சியை முதல்நிலை நகராட்சியாக உயர்த்துவது குறித்து ஆராயப்படும்.

(1)	(2)	(3)	(4)
44	97-86	உடுக்குறியிடாத வினா 2640, திரு. இரா. தாமரைக்கனி, எம்.எல்.ஏ., 28—1—1986.	மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் தேவக்கோட்டையில் புதிய பணிமனை அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.

(5)

தேவகோட்டையில் பணிமனை அமைப்பதற்கான நில ஆர்ஜிதம் தொடர்பான 25—2—1993 அன்று நடைபெற்ற 53-வது இயக்குநர் குழுமத்தின் கூட்டத்தில் கீழ்க்கண்ட அறிக்கை முடிவு செய்யப்பட்டது :—

'' தற்போதைய நிதி நிலைமை மற்றும் இருக்கக்கூடிய வசதிகளை கணக்கில் கொண்டும் தேவக்கோட்டை வட்டத்தில் உள்ள உடையாச்சி கிராமத்தில் புல எண். 2ன முதல் 2இ-இல் உள்ள 3.62 ஏக்கர் நிலத்தினை ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கைகளை இரத்து செய்ய நிர்வாக இயக்குநருக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது ''. எனவே, இது தொடர்பாக மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டாம் என தெரிவித்து தேவக்கோட்டை உதவி ஆட்சியர் அவர்களுக்கு மருது பாண்டியர் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரால் கடிதம் எழுதப்பட்டு உள்ளது. மேற் கண்ட சூழ்நிலையில் இவ்வறுதி மொழியினை முடிவுற்றதாகக் கருதுமாறு சட்டமன்றப் பேரவை செயலகத்திற்கு துறையின் நேர்முக கடித எண். 33649/பி1/94-1, நாள் 21—11—1994 அன்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மாற்றம் எதுவும் இல்லை.

காமராஜர் மாவட்டம்.

கல்வித்துறை.

45	339-94	உடுக்குறியிட்ட வினா எண். 21058 துணை வினா திரு. திருத்தங்களில் தொடக்கப் பள்ளி தொடங்குவது குறித்து. ஜெ. பாலகங்காதரன், எம்.எல்.ஏ., 7—11—1994.	

(5)

1995—96 ஆம் நிதியாண்டில் 100 புதிய ஊராட்சி ஒன்றிய நுவக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும். அப்போது ஸ்ருத்தங்களில் தொடக்கப் பள்ளி ஆரம்பிப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

கால்நடைபராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை.

46	46-94	உடுக்குறியிட்ட வினா எண். 21576 துணை வினா திரு. ஜெ. பாலகங்காதரன், எம்.எம்.ஏ., 17—3—1994.	சிவகாசி கூட்டுறவு பால் பண்ணைக்கு கூடுதலாக பால் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

சிவகாசி நகரில் இயங்கிவரும் சிவகாசி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் தனது உறுப்பினர்களிடமிருந்து தினசரி 1,800 லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகிறது. இச்சங்கம் தனது தேவைக்கு காமராசர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திலிருந்து தினசரி 1,300 லிட்டர் பால் வாங்கி நாள் ஒன்றுக்கு மொத்தம் 3,100 லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது. மேலும் காமராசர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும் நேரடியாகத் தனது முகவர்கள் மூலம் தினமும் 1,700 லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது. சிவகாசி நகரின் ஒரு நாள் பால் விற்பனை 4,800 லிட்டர் ஆகிறது. சிவகாசி கூட்டுறவு பால உற்பத்தியாளர்கள் சங்கத்தின் வேண்டுகோளின்படி முழுமையான அளவு பால் இம்மாவட்ட ஒன்றியத்தின் மூலம் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(1)	(2)	(3)	(4)
47	108-94	உடுக்குறியிட்ட வினா எண். 22301 துணை வினா திரு. பாலகங்காதரன், எம்.எல்.ஏ., 25—3—1994.	சிவகாசித் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க நிறுவனங்கள் முன்வந்தால் இண்டஸ்ட்ரியல் சப் கிளையை மட்டும் பெற்றுத்தர அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

(5)

கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்க மத்திய அரசின் தற்போதைய உத்தரவின்படி இண்டஸ்ட்ரியல் சப் கிளை (தொழிற் சாலை துவங்க அனுமதி) அவசியமில்லை. சிவகாசி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க தனியார் நிறுவனங்கள் போதுமான நிதி வசதியுடன் முன் வருங்கால் அதனை அமைத்துத்தர அரசு இயன்ற உதவிகளை செய்யும்.

மேலும் காமராசர் மாவட்டத்தில் ஏற்கனவே ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்பட்டு 1961 முதல் இயங்கி வருவதால் மேலும் ஒரு கூட்டுறவு நூற்பாலை அரசு முதலீட்டில் சிவகாசியில் துவங்க இயலாது.

(கடித எண். ந.க. 55436/94/டி3: நாள் 21—11—1994.)

தொழில் துறை.

(1)	(2)	(3)	(4)
48	487-93	உடுக்குறியிடாத வினா 9904, திரு. தி. சாத்தையா, எம்.எல்.ஏ., 23—4—1993.	இராஜபாளையம் தொகுதியில் சிட்கோ மூலம் தொழிற் பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில உள்ளதா என்பது குறித்து.

(5)

இராஜபாளையம் தொகுதியில் ''சிட்கோ'' மூலம் தொழிற்பேட்டை அமைக்க சோழபுரம் மற்றும் தெற்கு வெங்கா நல்லூர் ஆகிய கிராமங்களில் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டன. மேற்படி நிலங்கள், உரிமதாரர்களிடமிருந்து மாவட்டாட்சியரின் டி1/எஸ்.ஆர். 07/93, நாள் 17—9—1993-ன் படி நிலப் பேரப்பேச்சு கூட்டம் அமைத்து நிலத்தின் மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 80,000 என நிர்ணயம் செய்யப்பட்டது. முதற்கட்டமாக 26.88 ஏக்கர் நிலம் ரூ. 21,50,800 க்கும் இரண்டாவது கட்டமாக 14.24 ஏக்கர் நிலம் ரூ. 11,39,200-க்கும் ஆக மொத்தம் 41.24 ஏக்கர் நிலம் ரூ. 32,90,000-க்கு வாங்கப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் முதல் கட்டமாக 16மீ X 12மீ அளவில் 10 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு வரப்பெறுகின்றன. அவைகள் தற்போது கட்டிமுடிக்கும் தருவாயில் உள்ளன. இத்தத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 85 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1994 அக்டோபர் முடிய ரூ. 52 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. கட்டிட வேலை, மற்றும் அடிப்படை வசதிகளாகிய சாலைகள், தண்ணீர் வசதி மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகியன இன்னும் இரண்டு மாதங்களுக்குள் முடிவடையும்.

சிறுதொழில் துறை.

(1)	(2)	(3)	(4)
49	139-94	உடுக்குறியிட்ட வினா எண். 21257 துணை வினா திரு. பாலகங்காதரன், எஸ்.எம்.ஏ., 5—4—1994.	சிவகாசியில் பனியன் தொழிற்சாலை இந்த ஆண்டு 50 பேர் முன்வந்தால் அதை தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.